செ.வெ.எண். 07 நாள்: 25.01.2017

## 7வது தேசிய வாக்காளர் தினம் பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெற்றது

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாக அம்மா மாளிகையில் இன்று (25.01.2017) தேசிய வாக்காளர் தின நிகழ்ச்சி நடைபெற்றது.

வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், வாக்காளர்களாக தங்களது பெயர்களை பதிவு செய்வதன் அவசியம் குறித்தும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2011ம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 25ம் நாள் தேசிய வாக்காளர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், இன்று 7வது தேசிய வாக்காளர் தினம் பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெற்றது.

இந்திய தலைமை தேர்தல் ஆணையாளர் திரு.நஜீம் சைதி அவர்களின் தேசிய வாக்காளர் தின செய்தி காணொலி காட்சியின் மூலமாக ஒளிபரப்பப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ப.மகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தேசிய வாக்காளர் தின உறுதிமொழியினை வாசிக்க அனைவரும் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 01.01.2017யை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு தயாரிக்கப்பட்டு 05.01.2017 அன்று வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின்படி, புதியதாக 82,666 வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வண்ண வாக்காளர் அடையாள அட்டைகளை வழங்கும் பணி துவங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், 6 வாக்காளர்களுக்கு வண்ண வாக்காளர் அடையாள அட்டையினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ) திரு.க.சு.கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் துணை ஆணையாளர் (கல்வி) திரு.மா.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று வழங்கினார்கள்.

தேசிய வாக்காளர் தின உரையினை கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு.வெ.அன்புச்செல்வன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

பின்பு பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்ட கலைநிகழ்ச்சிகள் மற்றும் பேச்சுப்போட்டி நடத்தப்பட்டு அவர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் உதவி ஆணையாளர் (பொ.நி.ம.ப.) திருமதி.கஸ்தூரி அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திரு.கே.ரமேஷ், அவர்கள், கல்வி அலுவலர் திருமதி.ரஞ்சனி அவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**